## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, தோட்ட வேலையாளர்களுக்கான படிகள் சட்டம்

---

*[1981, நவம்பர் மாதம் 19 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1981, நவம்பர் மாதம் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 55* *தபாற் செலவு : சதம் 50*

## 1981 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, தோட்ட வேலையாளர்களுக்கான படிகள் சட்டம்

[1981, நவம்பர் மாதம் 19 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 27/80 / 1407

தோட்ட வேலையாளர்களுக்குப் படிகள் கொடுப்பனவு செய்வதற்கும், அத்துடன், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமான ஒரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, தோட்ட வேலையாளர்களுக்கான படிகள் சட்டமென எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியில் (இது இதனகத்துப்பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) இது நடைமுறைக்கு வருதலும் வேண்டும். *சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

2. இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென ஆணையாளரானவர், தகுதிவாய்ந்த அதிகாரியாக இருத்தல் வேண்டும். *தகுதிவாய்ந்த அதிகாரி.*

3. பின்வரும் தொழில்களிலுள்ள, அதாவது— *இச்சட்டத்தின் ஏற்புடைமை.*

(அ) தேயிலை வளர்ப்பு, உற்பத்தித்தொழில் ;

(ஆ) இறப்பர் வளர்ப்பு, உற்பத்தித்தொழில் ;

(இ) தென்னை வளர்ப்புத் தொழில் ;

(ஈ) கொக்கோ, ஏலம், மிளகு வளர்ப்பு, உற்பத்தித் தொழில் ;

(உ) கறுவாத் தொழில் ; அத்துடன்

(ஊ) புகையிலைத் தொழில்

என்பவற்றிலுள்ள தோட்ட வேலையாளர்களுக்கும் அவர்கள் தொடர்பிலும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நியமித்த தேதியிலிருந்து ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன், தோட்டம் எப்பரப்பளவுடையதாயிருப்பினும், அத்தகைய வேலையாளர்கள் 5 ஆம் பந்தியின்கீழ் குறித்துரைக்கப்பட்ட படிகளுக்கு உரித்துடையவர்களாதலும் வேண்டும்.

4. சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழான ஏதேனும் படிக் கொடுப்பனவுக்கு, கொடுப்பனவு தொடர்பில் 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வேலையாளர்களுக்கு, தோதான சம்பளச் சபையினால் செய்யப்பட்ட தீர்மானமொன்றினால் அத்தகைய கொடுப்பனவுகள் செய்யப்படத் தேவைப்படுத்தப்பட்டாற்போன்று ஏற்புடையனவாதல் வேண்டும். *குறித்தசில படிகளின் விடயத்தில் சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல்.*

5. (1) மூன்றும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வேலையாளர்களின் வகுதிகளுள் எவற்றிற்கும் கொடுப்பனவு செய்யப்படற்பாலதாகவிருக்கின்ற அல்லது கொடுப்பனவு செய்யப்படற்பாலதாக வரக்கூடிய படி எதனையும் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் குறித்துரைத்தல் வேண்டும். *அமைச்சர் படியைக் குறித்துரைத்தல்.*

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தொகையை, கசெற்றில் வெளியிடப்படும் பின்னரான கட்டளையொன்றினால், அமைச்சரானவர் வேறுபடுத்தலாம்.

வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டம் வலுவும் பயனும் உடையதாதல்.

6. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது வாய்மொழி மூலமான, எழுத்திலான, வெளிப்படையான அல்லது உட்கிடையான ஏதேனும் ஊழிய ஒப்பந்தத்தில் எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வலுவுடையதாதலும் பயனுறுதலும் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் ஏதேனும் அத்தகைய வேறு சட்டத்துக்கும் அல்லது அத்தகைய ஒப்பந்தத்துக்கும் இடையே முரண்பாடு அல்லது ஒவ்வாமை எதுவும் இருக்கும் விடயத்தில், அத்தகைய ஒவ்வாமையின் அளவுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள், ஏதேனும் அத்தகைய வேறு சட்டத்தை அல்லது அத்தகைய ஒப்பந்தத்தை மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

தொழில்தருநர்களால் பதிவேடுகள் பேணப்படுதல்.

7. (1) மூன்றும் பிரிவில் தரப்பட்டுள்ள ஏதேனும் தொழிலிலுள்ள வேலையாளரொருவரின் தொழில்தருநர் எவ்விடத்தில் அத்தொழில் கொண்டுநடாத்தப்படுகின்றதோ, அவ்விடத்தில் அத்தொழிலில் அமர்த்தப்பட்டுள்ள வேலையாளர் தொடர்பில்—

(அ) தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாளர் ஒவ்வொருவரினதும் பெயர் ;

(ஆ) அத்தகைய ஒவ்வொரு வேலையாளினாலும் புரியப்படும் வேலையின் வகுப்பு ;

(இ) இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய வேலையாளுக்குச் செலுத்தப்பட்ட தொகை

ஆகியவற்றைக் காட்டுகின்ற பதிவேடொன்றைப் பேணிவைத்திருத்தல் வேண்டும்.

(2) தொழில்தருநர் ஒருவராக (1) ஆம் உட்பிரிவின் கீழ், பதிவேடதனையும் பேணுகின்ற அல்லது பேணியுள்ள ஆளொவ்வொருவரும், ஆறு ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்கு அத்தகைய பதிவேட்டைப் பவுத்திரப்படுத்தல் வேண்டும் என்பதுடன், தகுதிவாய்ந்த அதிகாரியினால் அவ்வாறு தேவைப்படுத்தப்படும்போது, பரிசோதனைக்காக அத்தகைய பதிவேட்டைச் சமர்ப்பித்தலும் வேண்டும் ; அத்துடன், அத்தகைய பதிவேட்டின் உண்மைப் பிரதியொன்றை வழங்குதல் வேண்டும் அல்லது அத்தகைய பிரதி எடுக்கப்படுவதற்கு அனுமதித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டிருக்கின்றவாறு அத்தகைய பதிவேட்டினைப் பேணத் தவறும் எவரேனும் தொழில்தருநர், தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது மூன்று மாதகாலத்துக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொன்றான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

6. தகுதிவாய்ந்த அதிகாரியானவர்— **தகுதிவாய்ந்த அதிகாரியின் தத்துவம்.**

(அ) இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேலையாளர்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கும் எந்த இடத்துக்குள்ளும், கூலிகள் பற்றிய ஏதேனும் இடாப்பை அல்லது பதிவேட்டைச் சோதனைசெய்யும் நோக்கத்துக்காக அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக பகலில் அல்லது இரவில் நியாயமான எல்லா நேரங்களிலும் புகுந்து பரிசோதனை செய்வதற்கு; அல்லது

(ஆ) அவர் அத்தகைய இடத்தைப் பரிசோதனை செய்யும்போது அத்தகைய பதிவேடு அல்லது இடாப்பு எதுவும் சோதிப்பதற்கு இல்லாதவிடத்து, அத்தகைய இடத்தில் அல்லது அவரின் அலுவலகத்தில் சோதனைக்காகவென குறித்துரைக்கப்படும் பின்னைய தேதியொன்றில் அத்தகைய இடாப்பை அல்லது பதிவேட்டைச் சமர்ப்பிக்கும்படி தேவைப்படுத்துவதற்கு; அல்லது

(இ) அத்தகைய ஏதேனும் இடாப்பை அல்லது பதிவேட்டை முழுமையாக அல்லது பகுதியளவில் பிரதி எடுப்பதற்கு; அல்லது

(ஈ) அத்தகைய இடத்தில் காணப்படுபவரும் அத்தகைய இடத்தில் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள தொழில்தருநர் ஒருவர் அல்லது வேலையாளரொருவர் என அவர் நம்புவதற்கான நியாயமான காரணமிருப்பவருமான ஆளெவரையும் வினவுதற்கு; அல்லது

(உ) அத்தொழில்தருநருக்கு இச்சட்டம் ஏற்புடையதாக இருக்கின்ற அத்தொழில்தருநர் எவரையும்—

(i) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவர் தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டும், அத்தகைய எவரேனும் தொழில்தருநரால் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எல்லா வேலையாளர் தொடர்பிலானதும் அல்லது அத்தகைய வேலையாளர்களின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வகுப்பு அல்லது விவரணம் தொடர்பிலானதும் ஆன விபரத்திரட்டொன்றை;

(ii) அத்தகைய எவரேனும் தொழில்தருநரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் கூறப்பட்டுள்ள எவையேனும் விபரங்கள் தொடர்பில் அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலை அல்லது விளக்கத்தை; அல்லது

(iii) அத்தகைய எவரேனும் தொழில்தருநரால் பேணப்படும் ஏதேனும் இடாப்பின் அல்லது பதிவேட்டின் முழுமையான அல்லது பகுதியளவான உண்மைப் பிரதியொன்றை,

குறித்துரைக்கப்படும் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ அவருக்குக் கொடுத்துதவுமாறு எழுத்தில் பணிப்பதற்கு,

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வேலையாளர்களுக்குப் போகுமதியான பணத் தொகையைச் செலுத்தத் தவறுதல்.

9. (1) இச்சட்டத்தின்கீழ் அத்தகைய தொழில்தருநரால் வேலையாளரொருவருக்குச் செலுத்தும்படி தேவைப்படுத்தப்பட்டுள்ள பணத் தொகையொன்றைச் செலுத்தத் தவறுகின்ற எவரேனும் தொழில்தருநர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாத காலத்துக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ், அத்தகைய தொழில்தருநரால் வேலையாளரொருவருக்குச் செலுத்தும்படி தேவைப்படுத்தப்பட்டுள்ள பணத் தொகையெதனையும் செலுத்தத் தவறியமைக்காக ஒரு தொழில்தருநர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து, அப்போது, வழக்கும் தொடங்கும் தேதிக்கு முன்பாக எந்நேரத்திலேனும், அவ்வாறு செய்வதற்கான முன்னம் பற்றி, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அறிவித்தலொன்றை தொழில்தருநரிடம் சேர்ப்பித்திருந்தால், தொழில்தருநர் எந்தத் தவறுக்கென அவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாரோ அந்தத் தவறு பற்றி நீதிமன்றத்துக்கு முறைப்பாடொன்று செய்யப்பட்ட தேதிக்கு முன்னரான ஆறுண்டுகளில், எக்காலப்பொழுதிலேனும் அந்த வேலையாளருக்கு அல்லது வேறெவரேனும் வேலையாளருக்கு அல்லது வேலையாளர்களுக்கு ஏதேனும் தொகையை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செலுத்துவதில் தொழில்தருநரின் ஏதேனும் தவறுகை பற்றிச் சான்று அளிக்கப்படலாம் என்பதுடன், தவறுகை பற்றிய எண்பிப்பின்மேல், நீதிமன்றமானது அத்தகைய வேலையாளருக்கு அல்லது வேலையாளர்களுக்கு தொழில்தருநரிடமிருந்து போமதியாகவுள்ளது என நீதிமன்றம் காணக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையைக் கொடுப்பனவு செய்யுமாறு அவருக்கு நீதிமன்றம் கட்டளையும் இடலாம். இவ்வுட்பிரிவின்கீழ் செலுத்தப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடப்பட்ட பணத்தொகை எதுவும் குற்றப்பணமொன்று என்றுபோன்று அதேமுறையில் அறவிடப்படலாம்.

(3) இப்பிரிவில் "விதித்துரைக்கப்பட்ட" என்பது, 11 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்ட என்பது பொருளாகும்.

இச்சட்டம் ஏற்புடைத்தாகும் வேலையாளர்களுக்கு குறித்த சில சட்டங்கள் ஏற்புடையனவாகா.

10. ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், 1968 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஊழியர்க்கான இடைக்கால நாணய மதிப்பிறக்கப் படியினுள்ளது, 1978 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, வேலையாட்களுக்கான விசேட படிகள் சட்டத்திலுள்ளது, 1978 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வேலையாட்களுக்கான வரவு செலவுத்திட்ட நிவாரணப்படி சட்டத்திலுள்ளது, 1978 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, வேலையாட்களுக்கான வரவு செலவுத் திட்ட நிவாரணப்படி (2 ஆம் இலக்கம்) சட்டத்திலுள்ளது அத்துடன், 1979 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க, வேலையாட்களுக்கான குறைநிரப்புப்படி சட்டத்திலுள்ளது, எதுவும் 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேலையாளர் எவருக்கும் ஏற்புடைத்தாகலாகாது.

ஒழுங்குவிதிகள்.

11. (1) இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டுமெனக் கூறப்பட்டுள்ள அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ள எல்லா விடயங்கள் தொடர்பிலும் அமைச்சரானவர், ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியான அளவு விரைவில், அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்துக்கு முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரமளிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அங்கீகாரமளிக்கப்படாத தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் செய்யப்பட்ட ஒழுங்குவிதியெதுவும் எத்தேதியிலிருந்து அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றதோ, அத்தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

12. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலொழிய— பொருள் கோடல்.

"கறுவாத்தொழில்", அத்தொழில் தொடர்பில் சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ், தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும், 1958 ஆம் ஆண்டின் யூலை 4 ஆம் தேதிய 11,410 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையிலுள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது;

"கொக்கோ, ஏலம், மிளகு வளர்ப்பு, உற்பத்தித்தொழில்" அத்தொழில்கள் தொடர்பில் சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ், தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும், 1946 ஆம் ஆண்டின் ஏப்பிரல் 4 ஆம் தேதிய 9,546 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையில் உள்ள அதே பொருளைக்கொண்டுள்ளது;

"தென்னை வளர்ப்புத்தொழில்", அத்தொழில் தொடர்பில், சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும், 1949 ஆம் ஆண்டின் மார்ச்சு 30 ஆம் தேதிய 9,961 ஆம் இலக்கக் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையில் உள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது;

"ஆணையாளர்" என்பது, அப்போதைக்குத் தொழில் ஆணையாளர் என்னும் பதவியினை வகிக்கும் ஆள் எனப் பொருளாகுமென்பதுடன், அப்போதைக்கு, பிரதித் தொழில் ஆணையாளரொருவராக அல்லது சிரேட்ட உதவித்தொழில் ஆணையாளரொருவராக அல்லது உதவித் தொழில் ஆணையாளரொருவராக அல்லது தொழில் அலுவலரொருவராகப் பதவி வகிக்கும் எவரேனுமாளையும் உள்ளடக்கும்;

"தொழில்தருநர்", என்பது ஏதேனும் தொழிலில் எவரேனும் வேலையாளரைத் தம் சார்பில் தாமே தொழிலுக்கமர்த்துகின்றவரான அல்லது தம் சார்பில் வேறு எவரேனும் ஆளைத் தொழிலுக்கமர்த்துகின்றவரான எவரேனும் ஆள் எனப் பொருள்படும் என்பதுடன், ஏதேனும் தொழிலில் எவரேனும் வேலையாளரை எவரேனும் ஆளின் சார்பில் தொழிலுக்கமர்த்துகின்ற எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்;

"இறப்பர் வளர்ப்பு, உற்பத்தித்தொழில்", அத்தொழில் தொடர்பில் சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும், 1949 ஆம் ஆண்டின் பெப்ருவரி 23 ஆம் திகதிய 10,035 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்டதுமான கட்டளையில் உள்ள, அதே பொருளைக் கொண்டுள்ளது;

"தேயிலை வளர்ப்பு, உற்பத்தித்தொழில்", அத்தொழில் தொடர்பில், சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும், 1944 ஆம் ஆண்டின் சனவரி 7 ஆம் திகதிய 9,224 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்டதுமான கட்டளையில் உள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது;

"புகையிலைத்தொழில்", அத்தொழில் தொடர்பில், சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும், 1963 ஆம் ஆண்டின் யூலை 31 ஆம் திகதிய 13,213 ஆம் இலக்க அதி விசேட கசெற்றில் வெளியிடப்பட்டதும் ஆன கட்டளையில் உள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது; அத்துடன்

"படிகள்", சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 60 ; (வெளிநாடு) ரூபா 80 ; ஒவ்வோராண்டும் டிசம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.